2014 ஜூலை 30]

வாழும் கர்ணனாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திருக்கோயிலின் பிற புனரமைப்புப் பணிகளுக்காக 13-வது நிதிக் குழுவிலிருந்து ரூ.30 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள். தெய்வம் சக மனிதரின்மூலம்தான் நமக்கு உதவி செய்கிறது என்கிற வார்த்தைக்கு அடையாளமாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, மிக விரைவில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 280, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

280—

சமுதாய நலக் கூடம்

***22078—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, நாகநல்லூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, துறையூர் வட்டம், உப்பிலியாபுரம் ஒன்றியம், நாகநல்லூர் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, ஆதி திராவிட சமுதாய மக்களுக்கு சமுதாய நலக் கூடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட உப்பிலியாபுரம் ஒன்றியம், நாகநல்லூர் பகுதியில், 2,000-க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர்கள் மற்றும் அருந்ததியர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. அந்தப் பகுதி மக்களுக்கு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கண்ணனூர் பகுதியிலும் அதிகப்படியான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதி மக்களும் நீண்டநாட்களாக சமுதாய நலக் கூடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் நாகநல்லூர் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, புதிய சமுதாயக் கூடம் கட்டவிருப்பதால், ஒரே சட்டமன்றத் தொகுதியில் இன்னொரு சமுதாயக் கூடம் கட்ட இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.